*Volume No: 1* *Issue 1* *September 2016*

*International Multidisciplinary Innovative Research Journal*
*-An International refereed e-journal of literary Explorations*
*ISSN:* 2456 - 4613
*IMIRJ, 1(1), 2016 [1-5]*

# திணைமாலை நூற்றைம்பதில் பண்பாட்டுப் பதிவுகள்



**ஜெயா.சௌ.**
**உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை**
**வே.வ. வன்னியப்பெருமாள் பெண்கள் கல்லூரி**
**விருதுநகர்**
**E-mail: jaya.soundrapandian@gmail.com**

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழர்களின் அகவாழ்வினை ஐந்து திணைகளுக்குள் அடக்கி அதை இலக்கியங்களில் பதிவு செய்த பெருமை நம் தமிழருக்குண்டு. ஐந்திணைகளுக்கு உரிய செய்திகளை தொல்காப்பியர் அகத்திணை இயலில் கூறியுள்ளார். பதினெண்கீழ்க்கணக்கில் இடம்பெறும் அகம் சார்ந்த நூல்களுள் ஒன்று திணை மாலை நூற்றைம்பது ஆகும். இதன் ஆசிரியர் கணிமேதாவியார். இந்நூலில் அமைந்துள்ள தமிழர் தம் பண்பாட்டுப் பதிவுகளைப் குறித்து ஆய்வதே இவ்வாய்வின் நோக்கமாக அமைகின்றது.

**குறிப்புச் சொற்கள்: உரைதெரிகணிதர் - ஜோதிடநூல் அறிந்தவர்**

**முன்னுரை**

ஓர் இனத்தின் தொன்மையை அதன் பண்பாட்டைக் கொண்டு அளவிடுவர். மேலை நாடுகளின் பண்பாட்டுக் கலாச்சாரம் என்பது சென்ற சில நூற்றாண்டுகளுக்கு முந்தய ஒன்றாக உள்ளது. ஆனால் தமிழகத்தின் சமுதாயப் பண்பாட்டுக் கலாச்சாரம் என்று பார்க்கும் போது அதற்கான சான்றுகளை தொல்காப்பியர் காலத்திலிருந்தே பார்க்க முடிகிறது. எனவே தமிழர்கள் தொன்மையான பண்பாட்டைக் கொண்டவர்கள் என்று நம்மால் எளிதில் நிறுவ முடியும்.

**திணை மாலை நூற்றைம்பது**

பதினெண்கீழ்க்கணக்கில் ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது,திணை மொழி ஐம்பது, திணைமாலை நூற்றைம்பது, கார்நாற்பது, கைந்நிலை என்ற ஆறும் அக நூல்களாகும். திணை என்பதற்கு “ஒழுக்கம்” என்பது பொருள். அகத்திணை ஐந்தும் அகத்திற்கே உரிமை பெறுவதால் அன்பின் ஐந்திணை என்று அழைக்கப்படும். திணை மாலை நூற்றைம்பது தொல்காப்பியர் சொல்லும் அகப்பொருள் இலக்கணத்திற்குப் பொருந்திய அக இலக்கியமாகும்.

**வேலன் வெறியாடல்**

வேலன் பற்றியும், வேலன் வெறியாடல் பற்றிய செய்தியும் நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு, முருகாற்றுப்படை, போன்ற இலக்கியங்களில் கூறப்பட்டுள்ளன. ஐங்குநூற்றில் பத்து செய்யுட்கள் வெறியாடலைக் குறித்த செய்திகளாகக் காண முடிகிறது. அவ்வாறே திணை மாலை நூற்றைம்பதிலும் வேலன் வெறியாடல் பற்றிய செய்திகள் உள்ளன. வெறி விலக்கி, தோழி செவிலிக்கு அறத்தொடு நின்ற நிலையில் இதைக் காண முடிகிறது. தலைவனைக் களவில் சந்தித்த தலைவியின் மேனியில் சிற்சில மாற்றங்கள் தெரிகின்றன.

இம்மாறுதல்கள் தெய்வத்தினால் நிகழ்ந்தது என்று நினைத்துத் தாய் வேலன் வெறியாட்டுக்கு ஏற்பாடு செய்கிறாள். அப்போது தோழி தலைவியின் உடல் மாற்றத்திற்குக் காரணம் தெய்வம் அல்ல. தலைவன் மீது கொண்ட காதல் என்று குறிப்பாக உணர்த்துகிறாள். வெறியாடலின் போது ஆட்டுக் குட்டியைப் பலி செய்தல், கள்ளைப் படைப்பது என்பது பண்டையத் தமிழரின் பழக்கம். இதனைப் பின்வரும் பாடல் பதிவு செய்துள்ளது.

**"வேலனார் போக மறிவிருக்க் வேரியும்**
**பாலனார்க்கு ஈக பழியிலாள் பாலால்**
**கடும் புனலின் நீந்தி கரை வைத்தாற்கு அல்லால்**
**நெடும் பணை போல் தோள்தேராள், நின்று" (12)**

குறிஞ்சிக் கடவுள் முருகன். முருகனை வேண்டி ஆடு பலி கொடுத்து வழிபட்ட செய்தி இங்கு காட்டப்படுகிறது. குறவப்பெண்கள் நடத்தும் வெறியாட்டு நிகழ்ச்சியைப் பற்றி விரிவாக முருகாற்றுப் படையில் கூறப்பட்டு உள்ளது. சங்க இலக்கியங்களில் முருகன் வெறியாட்டு வழிபாடாக அமைந்திருந்தது. மலையும் மலை சார்ந்த பகுதியான குறிஞ்சி நிலத்தில் இவ்வெறியாடல் நிகழ்ச்சி மிகுதியாக இடம் பெற்றுள்ளது. இவ்வாறே திணைமாலை நூற்றைம்பதிலும் குறிஞ்சித் திணையில் இப்பாடல் இடம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

**நல்ல நாள் பார்த்தல்**

சங்க காலத்தில் நன்நாள், தீ நாள் பார்க்கும் பழக்கம் இருந்து வந்துள்ளது. இப்பழக்கம் மக்கள் தம் வாழ்க்கையிலும், காதலன், காதலியர் தம் வாழ்க்கையிலும் இருந்து வந்துள்ளது. தலைவனும், தலைவியும் தம் வாழ்வில் நல்ல நேரத்தில் சேர்ந்து சந்திக்கும் பழக்கத்தினைக் களவு காலத்திலும் மேற்கொண்டனர். இதனைத் தொல்காப்பியரின் களவியல் நூற்பாவின் மூலம் உணர்ந்து கொள்ளலாம்.

**"மறைந்த ஒழுக்கத்து ஓரையும் நாளும்**
**துறந்த ஒழுக்கம் கிழவோர்க்கு இல்லை"[2] (தொல்.பொ. 135)**

மக்கள் எந்த ஒரு செயலையும் தொடங்குவதற்கு முன் நல்ல நாள் பார்ப்பது வழக்கம் திணை மாலை நூற்றைம்பதில் விதை விதைத்தல், அறுவடை செய்தல், திருமணம் நிகழ்த்துதல் என்ற நிலையில் நன்னிமித்தங்கள் பார்க்கப்பட்டதை அறிய முடிகிறது..

**திருமணம்**

திருமணத்திற்கு நல்ல நாள் பார்த்தல் என்பது இன்று வரை நம்மிடையே உள்ளது. திருமணம் குறித்த செய்திகள் இலக்கியங்களில் காணக்கிடக்கின்றன. இப்பாடல் தலைமகளைத் தோழி வரைவுக்கடாயது ஆகும்.

**"திரை பாகன் ஆக, திமில் களிறு ஆக,**
**கரை சேர்ந்த கானல் படையா விளையாது**
**வேந்து கிளர்ந்தனை வேலை நீர்ச் சேர்ப்ப**
**ஆய்ந்து வரைதல் அறம்."(52)**

இப் பாடல் தலைவியை மணக்க நல்ல நாளினை ஆராய்ந்து மணம் செய்து கொள்ளுமாறு தோழி தலைவனிடம் கூறுகிறாள். மேலும் தலைவி வீட்டினைச் சந்தித்து விளக்கம் கூறி திருமணம் முடித்துக் கொள் என்று தோழி தலைமகனிடம் கூறியதாக "மற்று எமர் முன் கிளர்ந்து எய்தல் முடி!" (53) வது பாடல் அமைந்துள்ளது.

**ஐம்படைத்தாலி**

பெண்கள் மட்டுமின்றி குழந்தைகளும் தாலி அணிந்தனர். இது ஐம்படைத்தாலி என அழைக்கப்பட்டது. சங்கு, சக்கரம், தண்டாயுதம், வாள், வில் ஆகிய ஐந்து கருவிகளின் உருவங்கள் அமைந்த இத்தாலியைப் பிறந்த ஐந்தாம் நாளில் பிள்ளைகளுக்குச் சூட்டினர் (அகம் 54: புறம் 77) ஐம்படைத்தாலி என்பது காப்புப் பருவத்தில் ஆண் குழந்தைகளின் கழுத்தில் அணியப்படுவது. இது அக்குழந்தைக்கு பாதுகாவலாக இருக்க வேண்டும் என்ற நிலையில் அணிவிக்கப்படுகிறது. இவை அணிவதால் திருமாலுடைய ஐந்து ஆயுதங்கள் போல் பொன்னால் செய்யப்படுதலின் இப்பெயர் பெற்றது. இதனைத் திணை மாலை நூற்றைம்பதும் பதிவு செய்துள்ளது.

**“வல்லவரும் காணாய் வயங்கி முருக்கெல்லாம்**
**செல்வர் சிறார்க்குப் பொற்கொல்லர் போல் நல்ல**
**பவளக் கொழுந்தின் மேல் பொன் - தாலிபா அய்த்**
**திகழக் கான்றிட்டன, தேர்ந்து” (16)**

செல்வம் உடையவரின் மக்களுக்கு பொற்கொல்லர் செய்த ஐம்படைத்தாலியை அணிவித்தது போலப் பொன்னால் செய்யப்பட்ட கழுத்தணியின் மீது பவளமான துண்டத்தைப் பொருத்தி வைத்தார் போன்று முருக்க மலர் பள் காணப் பெறுகின்றன. எனவே வேனிற்காலம் வந்து விட்டது என்று தோழி தலைவியிடம் கூறியதாக அமைந்த பாடல் இது. இப்பாடலில் பொற்கொல்லர் என்ற சொல், பண்டையத் தமிழகத்தில் இவர்கள் வாழ்ந்து வந்ததற்கானச் சான்றாக திகழ்கிறது. இப்பாடல்,

**குறி அறிவார்**

நன்னாள் பார்த்துக் கூறுகின்றவர்களும் அக்காலத்தில் வாழ்ந்து வந்துள்ளனர் என்பதையும் திணை மாலை நூற்றைம்பது பதிவு செய்துள்ளது. இது குறித்த செய்தி கம்பராமாயணத்திலும் காணப்படுகிறது. இராம பட்டாபிஷேகத்திற்கு குற்றமற்ற தினத்தோடு கூடிய சுபமுகூர்த்தத்தை பார்ப்பதற்காக உரைதெரி கணிதரை அழைத்தான் தசரத சக்கரவர்த்தி என்பதை பின்வரும் கம்பராமாயணப் பாடல் சுட்டுகிறது.

**“அரசரை வித்தபி னாணை மனைவன்**
**புரைதபு னாளொடு பொழுது நோக்குவான்**
**உரைதெரி கணிதரை யொருங்கு கொண்டொரு**
**வரைபொரு மண்டப மருங்கு போயினான்”**[1]
**(அ.மந்திர (88))**

இக்குறிஅறிவார் தமிழ்மரபில் பண்டெருங் காலமாக இருந்துவந்துள்ளனர் என்பதை மேற்கூறிய சான்றின் வழி அறிய முடிகிறது.

**“வாராய் வரின் நீர்க்கழிக் கானல் நுண்மணல் மேல்**
**தேரின் மாகால் ஆழும் தீமைத்தே; ஓர் இலோர்**
**கோள் நாடல் வேண்டா: குறி அறிவார்க் கூடாய்க் கொண்டு ஓர்**
**நாள் நாடி, நல்குதல் நன்று” (54)**

இப்பாடல் தலைமகளைத் தோழி வரைவு கடாயது. இரவில் இனியும் தலைவியைக் காண வாராதே. குதிரை பூட்டியத் தேரில் கடலோர மணலில் நீ வரும் போது புதை மணலில் குதிரையின் குளம்புகள் அழிந்து விடக் கூடும். எனவே நாள் நட்சத்திரம் பார்க்கத் தேவையில்லை. குறி அறிவாரை அணுகி உரிய நாளை முடிவு செய்து இவளைத் திருமணம் செய்து கொள் என்கிறாள் தோழி. இப்பாடலில் நாள் கோள் பார்க்கும் பழக்கம் இருந்துள்ளது என்பதும், அது ஒரே ஒரு குலத்துக் காதல் நிகழ்ந்த இடத்து பார்க்கத் தேவையில்லை என்பதும் **கோள் நாடல் வேண்டா** என்ற தொடரால் அறிய முடிகிறது. மேலும் இந்நன்னாளை குறித்துத் தருபவரும் இருந்துள்ளார் என்பதை குறியறிவர் என்ற சொல்லும் நமக்கு உணர்த்துகிறது.

**வில்லர் விழா**

தன் மகளை அலங்காரம் செய்து அடி முதல் முடி வரை பெருமிதம் கொண்டு இத்துணை அழகுடைய தன் மகளுக்கு மணமகன் யாரோ எனக் கவலை கொண்ட செவிலிக்கு தோழி அறத்தொடு நின்ற சூழலில் வில்லர் விழா குறித்த செய்தி இடம் பெற்றுள்ளது.

**"வில்லார் விழவினும், வேல் ஆழி சூழ் உலகில்**
**நல்லார் விழவகத்தும், நாம் கானோம் நல்லாய்!**
**உவர்க்கத்து ஒரோ உதவிச் சேர்ப்பன் ஒப்பாரைச்**
**சுவர்கத்து உளராயின் சூழ்"(62)**

கடல் சூழ் இவ்வுலகத்தில் வில் வீரர் திரண்டு நடத்தும் வில்விழாக் கூட்டத்திலும், நல்ல பெண்கள் மணம் காரணமாகக் கூடிய திருமண விழாவிலும் உன் மகளுக்கு ஏற்றதாக நான் கண்டதில்லை. எனவே இவளுக்குத் தக்கவன் அவனே. அவனை அல்லாமல் வேறோரு இருக்கிறாரா என்று சொர்க்கத்தில் தான் பார்க்க வேண்டும் என்கிறாள் தோழி. அக்காலத்து ஏற்ற மணமகனையும், மணமகளையும் தெரிவு செய்வதற்காக வில் விழா நடத்தப்பட்டது என்பதையும் இன்றைய காலத்தில் திருமண விழாக் காலத்தில் ஒருசில திருமணங்கள் நிச்சயிக்கப் படுவதைப் போன்று திணைமாலை நூற்றைம்பதில் இது குறித்த செய்திகள் சுட்டப்படுகின்றன. . அதாவது தலைவியைக் காதலித்த தலைவன் சொர்க்கத்தில் வாழும் தேவர்க்கு நிகரானவன் எனத் தோழி, தாய்க்குச் சுட்டிக் காட்டுகிறாள்.

**பிற ஆடவரை பார்க்காத நிலை**

உடன்போக்குச் சென்ற தலைவன் தலைவியரை நேரில் பார்த்தோர், தலைவியைத் தேடி வரும் செவிலியிடம் சொல்லி ஆற்று வித்த நிலையில் பிறரை நோக்காத பண்பினை பார்க்க முடிகிறது.

**"நண்ணி நீர் சென்மின் நமர் அவர் ஆய்வேல்**
**எண்ணிய எண்ணம் எளிது அரோ, எண்ணிய**
**வெஞ்சுடர் அன்னானை யான் கண்டேன் கண்டாளர்**
**தண்சுடர் அன்னாளை தான்"(89)**

நீர் எண்ணித் தேடி வரும் கதிரவனை ஒத்த தலைவனை வழியில் சந்தித்தேன் குளிர்ந்த நிலவைப் போன்ற அழகுடைய தலைவியை என் மனைவி எதிராகப் பார்த்தாள். என்று கூறுமிடத்து ஆடவன், அயல் பெண்ணைப் பார்க்கக் கூடாது பெண் அயல் ஆடவனைப் பார்க்கக் கூடாது என்ற தமிழர் தம் பண்பாடு இதில் பொதிந்துள்ளது.

**சகுனங்கள்**

ஒரு சமூகத்தின் பண்பாட்டு மரபை அறிந்து கொள்ள துணைபுரிவது, அச்சமூகத்தின் நம்பிக்கைகள் ஆகும். இவை மக்களின் தேவைக்காக மக்களால் உருவாக்கப்பட்டவை. இவை தொன்று தொட்டு தொடர்ந்து வருகின்ற ஒன்றாகும். நம்பிக்கைகளில் முக்கியமான ஒன்று 'சகுனம்' பார்த்தல் ஆகும். தொல்காப்பியர் காலத்தும் புறப்பொருள் வெண்பாவிலும் இதனை விரிவாக அறிய முடிகிறது. தொல்காப்பியத்தில் இதனை நிமித்தம் என்ற சொல்லால் சுட்டியுள்ளார் தொல்காப்பியர்.

**"தன்னும் அவனும் அவளுஞ் சுட்டி**
**மன்னும் நிமித்தம் மொழிப் பொருள் தெய்வம்**
**நன்மை தீமை அச்சஞ் சார்தலென்று**
**அன்ன பிறவும் அவற்றொடு தொகை"[3] (தொல். பொருள் 29)**

சகுனங்களில் கண் துடித்தல் என்பது ஒரு சகுனம் பார்ப்பதில் முக்கியமான ஒன்று ஆகும். இதில் பெண்களுக்கு இடக்கண் துடிப்பது நன்மை பயக்கும் என்பது இன்றும் நம்மிடையே வழக்கில் உள்ளது. இந்த நிமித்தம் திணை மாலை நூற்றைம்பதிலும் இடம் பெற்றுள்ளது.

**"உருவவேல் கண்ணாய்! ஒருகால் தேர்ச் செல்வன்**
**வெருவவீந்(து) உக்கநீள் அத்தம் வருவர்**
**சிறந்து பெறான் தருவான் சேண் சென்றார் இன்றே**
**இறந்து கண் ஆகும்இடம்" (80)**

பாலை நிலத்தின் வழியாகப் பொருள் தேடும் பொருட்டுச் சென்ற தலைவனை இன்றே வருவான் என்று தலைவி நம்பிக்கை கொள்கிறாள். அச்செய்தியை அறிவுறுத்தும் விதமாக இடக்கண் துடிக்கின்றது, தலைவிக்கு என்று சுட்டுகின்றது இப்பாடல்.

**முடிவுரை**

தமிழிலக்கியப் பரப்பு என்பது பரந்துபட்ட ஒன்றாகும். ஒவ்வொரு காலகட்டத்திலும் ஒவ்வொரு விதமாக இலக்கியங்கள் தோன்றி வருகின்றன. அவ்வாறு தோன்றி வளர்ந்து வரும் இலக்கியங்களில் நமது தொன்மையைப் பார்க்க முடிகிறது. அவ்வகையில் பதினெண்கீழ்க்கணக்கு நூலான திணைமாலைநூற்றைம்பதிலும் தமிழர் தம் கலாச்சாரக் கூறுகளைக் காண முடிகிறது.

**சான்றாதார நூல்கள்**

1. கம்பராமாயணம், அயோத்தியா காண்டம், மந்திரப்படலம், உரை – வை.மு. கோபாலகிருஷ்ணமாசாரியார், 88.
2. தொல்.இளம்பூரணார் உரை, 133, சாரதா பதிப்பகம், பதிப்பு 2014. சென்னை 14.
3. தொல்.இளம்பூரணார் உரை, 39, சாரதா பதிப்பகம், பதிப்பு 2014. சென்னை 14.

.